1978 மார்ச் 21]

உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, அவ்வாணை அமுல் படுத்துவதிலிருந்து நிறுத்த உத்தரவு பெற்றுள்ளது. ஆகையினால் இப்பள்ளியிலும் மற்றும் வடக்கன் குளத்தில் இதே நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளியிலும் மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட நூலகக் கட்டிடத்தில் நடைபெறும் கூட்டங்கள்.

* 646 வினா—திரு. என். கிட்டப்பா.—மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் ஒலிபெருக்கி பயன்படுத்தாமல் நடக்கும் இலக்கியக் கூட்டங்கள், செயற்குழுக் கூட்டங்களுக்குக் கூட போலீஸ் அனுமதி பெற்றாக வேண்டும் என்று அரசு புதிதாகக் கட்டளையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது முதல் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரையைச் சுற்றியுள்ள ஒன்றியப் பணியாளர்களுக்கு படிகள்.

* 647 வினா—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரை கார்ப்பரேஷன் எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஒன்றிய சிப்பந்திகள் அனைவருக்கும் வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் கொடுக்கப்பட வேண்டும் என்ற இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரையினை அமுல் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று மதுரை நகர எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் உட்பட எல்லா ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட சில அளவுகளின்படி வீட்டுவாடகை மற்றும் நகர ஈட்டுப் படிகள் கொடுக்கப்படவேண்டும் என்று அரசு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது.